

பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத்தளம் மீதான

**ஒப்பரேசன் தவளை**

வரலாற்றுச் சமரின் போது

காற்றோடு காற்றாய்க் கலந்த

# கப்டன் மயூரன்

( தீ. பாலசபாபதி ஆத்தியடி, பருத்தித்துறை. )

**அவர்களின்**

## 6-ம் மாத நினைவாக

# கண்ணீரில் மலரும் கருத்துக்கள்

01 - 05 - 1994

அண்ணன் காட்டிய வழியில் சென்ற தம்பி

# 6-ம் மாத நினைவாக

# கப்டன் மயூரன்

( தி. பாலசபாபதி )



அன்புக் கரங்களில்
உதித்தது

**01 - 11 - 1970**

அனலாய்மாறிப்
பாய்ந்தது

**11 - 11 - 1993**

"தம்பிக்கு உபதேசித்து தாயகம் காத்த தமையன்"

5ம் ஆண்டு நினைவாக

# கப்டன் மொறிஸ்

( தி. பரதராஜன் )



அருமை மகனாய்
தவழ்ந்தது
**12 - 09 - 1969**

மண்ணின் மைந்தனாய்
மடிந்தது
**01 - 05 - 1989**

# மயூரனின் வரலாற்றுச் சுருக்கம்

'மக்கள் வாழ்வே எம் வாழ்வு; அதுவே மதுரமான சுகவாழ்வு' என்று அவதார புருடராகவே அவதரித்தோர் பலர் அந்த வரிசையில் மண்ணுக்காக மரணித்துப்போன மாவேங்கையின் கதை இது. அன்னை சிவகாமசுந்தரியின் உதரத்தில் உருவாகி வீரத்தின் வித்தாக முளைத்தவன் தியாகராஜா பாலசபாபதி. அடிமைத் தளைநீங்க ஆயுதம் ஏந்திய அண்ணன் தியாகராஜா பரதராஜனின் வழியை தம்பியும் தன தாக்கிக் கொண்டான் 1969 - 09 2 பரதராஜனையும் 1970-11-01 பாலசபாபதியையும் ஈன்றெடுத்த அன்புத்தாய் 1984இல் பரதராஜனையும் [மொறிஸ்] 1987இல் பாலசபாபதியையும் [மயூரன்] தமிழீழ விடுதலைக்காக விட்டுக் கொடுத்தார். அன்றுமுதல் ஈழ விடுதலைக்காக் அவ்விருஜீவன்களும் இயங்கத் தொடங்கின.

ஆரம்பக் கல்வியை யா/வட இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பித்த இருவரும் உயர் கல்வியை யா/வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் யா/ஹாட்லிக் கல்லூரியிலும் தொடர்ந்தனர். படிப்பில் திறமையைக் காட்டிய இவர்கள் ஆசிரியர்களின் அன்பையும் பெருமளவில் சம்பாதித்துக் கொண்டார்கள். இந்நிலையில்தான் விடுதலை வேட்கை இவர்களில் ஊற்றெடுக்க ஆரம்பித்தது.

களத்தில் குதித்த இவர்கள், சிங்களப் படையையும், இந்தியப் படையையும் நடுநடுங்க வைத்தனர். இவர்களின் பெயரே அப்படைகளை கிலிகொள்ளவைக்கும் அளவுக்கு அப்போது நிலைமை இருந்தது இதனால் மொறிஸ் பருத்தித்துறை பொறுப்பாளன் ஆனான். மயூரன் அண்ணனின் தம்பியாக அருகில் இருக்கும் பாக்கியம் பெற்றான்.

1989 - 05 - 01 தன் அண்ணனை போர்க்களம் ஒன்றில் இழந்து துடித்தான் மயூரன் எனினும் மனம் சோராமல் களம் பல கண்டு எதிரிகளை தொடர்ந்தும் திணறடித்தான் இறுதியில் பூநகரி 'தவளை' நடவடிக்கையில் வீரகாவியம் படைத்து மரணத்தினால் மாவீரனாகிப் போனான் மயூரன். அவனது வீரமரணம் தமிழீழத்துக்கு ஓர் இழப்பாகினும் விடுதலைக்கு ஓர் வித்தாகும்.

# எம் செல்வமே

குறையேதும் விட்டறியோம் குறையெதுவும் கண்டறியோம்
பொறையிலே பூமிபோல் பிறந்த உன் பெருநோக்குக்கண்டு
நிறைவாக பலநினைந்து நாம் வாழ்ந்த நேரத்தில்
குறையாக நாமேதும் எண்ணாத போதினிலே
மறையாக நீ கண்ட தமிழீழ மந்திரத்தில்
சிறையாகித் தமிழர்கள் வாழ்ந்திடல் சீரில்லையென
உறைவாழும் துப்பாக்கியும் உன் தோளில் ஏந்தி நீ
கறையேதுமற்ற காவியம் படைத்திட விரும்பினாய்
திரைகடலாய் சூழ்ந்திட்ட தீபகற்ப எல்லையிலே
நிரையாக வீரரொடு நீ சென்ற சரித்திரத்தை பூநகரித்
துறையாகிய நாகதேவன் நம்மிடம் மீள வந்ததனை
மறைவாக நீ நின்று பார்க்குமிடம் ஏதென்று
முறையாக எமக்கு நீ சொல்வாயென்றேமாந்தோம்
வருவாய் நீ நிதமும் வண்ணமாகக் கனவினிலே
எழுவாய் நீ எமதெண்ணங்களில் எப்போதுமென்று
அருமையான அண்ணன் அன்றுனக்குக்
குருவாக உபதேசித்த கொள்கைக்குள் நின்றாயோ
திருவே! எம் செல்வமே! தீராத துக்கமுடன்
இருபேரையும் எண்ணி ஏங்குகிறோம் எப்போதும்
கண்கள் உமைத்தேடுதடா கால்கள் நாடியலையுதடா
கைகள் அணைக்கத் துடிக்குதடா கருப்பையே கொதிக்குதடா
மறைந்தோடிப்போன மக்களே நீவீர் வாருங்கள்
விரைந்தோடி வந்தே உம் வீரக்கதை கூறுங்கள்
பிரிந்து நீவீர் நின்றிட்டால் பெற்றவர் நாம் தாங்குவமோ

அன்பு அப்பா, அம்மா

# எம்மினிய தம்பியே

எட்டுத்திக்கும் புகழ்பரப்ப எண்மர் நாம் பிறந்தோமென
மட்டற்ற மகிழ்ச்சியில் மனம் பூரித்து நாம் நிற்கையிலே
குட்டுப்பட்டு வாழ்தலெம் குலத்திற்கீனமெனக்
கொட்டமடக்கிடக் கொன்றாய் எதிரிப்படைகளையே
விட்டுச் சென்றெங்களை வேங்கை வேடம் பூண்டாயே
பட்டபாடெல்லாம் போதுமென்று பரிதவிக்கும் மக்களுக்காய்
எட்டினாய் புகழையே எடுத்துச்சென்றாய் ஆயுதத்தை
பள்ளிக்கு நாமெல்லாம் படிக்கச் சென்ற வேளையிலே
அள்ளி அணைத்துன்னை அருகிலே ஏற்றிக்கொண்டு
மெள்ளமாகப் பேசுமுன்னை மென்மையாகக் கதைகேட்டோம்
துள்ளிநீயெழுவாய் துடிப்பான வேங்கை வீரனாகியென்று
அப்போது நாமெல்லாம் எள்ளளவும் எண்ணவில்லை
எம்மிளைய தம்பியே ஆறினைத் தொடரும் அடிச்சுவடே
ஏழாமவனாய் ஆகிவிட்ட ஏறே! எம்மினிய உடன்பிறப்பே!
ஆணழகனே! ஆண்மையின் உருவமே! அன்புமிகு
எம் செல்வமே!
அழகுத்திறன் பார்த்து அப்பாவுங்கள் தம்பி
அன்பழகன் என்பாரென
ஆற்றிய எம் வார்த்தைகள் அர்த்தமற்றுப்போனதடா உன்
புகைப்படந்தானடா எம் புத்திரர்க்குச் சபாச்சித்தப்பா,
உனதன்பு பெறாமக்கள் ஜனகன் கௌசிகன், பரதன்,
தக்ஷாவுடன்
ஜேர்மனியிலிருக்கும் மொறிஸ் உன்னை தேடுகிறான்.
தேடினால் வருவாயா? பாடினால் சிரிப்பாயா???
புலியாக வளர்ந்த நீ இப்போ புதியவனாகி விட்டாய்
பெற்றவர்க்கு பேரனாகி உற்றசோதரர்க்கு பிள்ளையாகி
எம் குடும்ப விளக்காகி எப்படியும் வந்திடுவாய் நீ
பெற்ற புகழ்பாட ஏற்றிவைப்போம் தீபத்தை.

அண்ணன்மார்

## எமதன்புச் சோதரனே!

அக்காமார் ஆச்சியொடு அன்புச்சோதரிகள் நாமிங்கு
ஆதாரம் நீயிருக்க அஞ்சாது அகத்திருந்தோம்
அல்லும் பகலும்மை அருமையாய் பேணிவந்தோம்
அடித்தறியாய் எடுத்தெறியாய் எல்லோரும் உயிர் என்றாய்
ஏச்சுமில்லை பேச்சுமில்லை எளிமையாகக் கதைத்திடுவாய்
சின்னப்பயலென்று மன்னிக்கத் தேவையில்லை
சினந்தறியா வுன்மீது சிறிதேனும் கோபமில்லை
செல்லப்பிள்ளையதனால் சிந்திக்காப் பிள்ளையென்று
சீறிடவைத்தறியா செம்மையாய் நடந்திடுவாய்
குறும்புகள் செய்தறியாய் குறும்புகண்டு முறுவலிப்பாய்
வம்பேதும் பேசிடாய வம்புகளை வாங்கிடாய்
வெம்பிடுவாய உள்ளம் வேதனையைக் கண்டபோது
திலீபன், தீபா, துமிலன், தரணியன், ரிஷியன்,
பஹீந்துஷாவான
உனதன்பு மருமக்கள் கம்சன் மாமாவல்ல
கண்ணன் மாமாவென ஆசையாய் நினைத்திட்டார்
தம்முடைய தம்பியென மைத்துனர்சள் வாதிடுவார்
எந்த வகையானவர்க்கும் எளிதிலே அன்பு செய்வாய்
தர்மசீலனே! எம்மினிய சபாவே! உன்திறத்தால்
கண்டிடுவோம் தமிழீழம் தம்பியரும் வந்திடுவார்
என்றெண்ணிக் கொண்டதெல்லாம் எங்கள் கனவாச்சு இன்று
பரதனோடு வந்திடுவான் பாலசபாபதியென்று
பார்த்திருந்த எங்களிடம் பாதுகையா அனுப்பிவைத்தாய்
சிரித்தமுகம் காட்டும் நீர் கறுத்தமுகம் காட்டுகின்றீர்
தீராத துயர்தந்து பாரத முகம் கொண்டீரே!
சோராமல் பார்க்கின்றோம் செங்காற்றாய் சென்றவுமை
ஓயாமல் கேட்கின்றோம் ஓடோடி வாருங்கள்
ஏற்றுகின்ற தீபத்தில் உன் ஒளி முகத்தைப் பார்த்திடுவோம்
உன் சுவட்டைப் பின்பற்ற ஓர் ஆணை இட்டிட்டாய்
எம் அன்பு ஆணைக்காய் எம்மோடு வந்திடுவாய்

அக்காமார், தங்கை

# கப்டன் மயூரன்

அண்ணன் "மொறிஸ்" வழியில்
அப்போதே அடிதொடர்ந்தாய்
"ஹாட்லி" யின் கல்வியையும்
காட்டமின்றிக் கைவிட்டாய்
'நாட்டுநிலை இதுவென்றால்
களத்திலே பதில் காண்போடா' - என
வேட்டுகள் தீர்க்க வேங்கையாய்ப் புறப்பட்டாய்
தலைவரின் அருகிருந்தாய்.

இந்திய ஆக்கிரமிப்பு
எகத்தாளமாய் நடக்க
ஈழத்து உயிர்மூச்சை
இதயத்தில் சுமந்துகொண்டு
காட்டிலே உயிர்வாழ்ந்தாய்
'கப்டன் மொறிஸ்' ஆகி அண்ணன்
விதையாக வீழ்ந்தபோதும் - தலைவன்
காலடி நின்றுகொண்டாய்

"ஈழப்போர் இரண்டு" எனும்
சகாப்தம் வெடிக்கையிலே
ஆளப்பிறந்தவனாய் அனல்கக்கும் கண்ணோடு
நாட்டிலே கால் மிதித்தாய்
எதிரிக் கூட்டினைச் சிதறடித்தாய்
வேங்கையாய்க் களம் பாய்ந்தாய்
வீரமிகு தலைவனின் விழிகளால் ஆசிபெற்றாய்,
தோளிலே அவர்கரம் படியவைத்தாய்.

மன்னார், மணகிண்டி என
வீரக் கதைபடித்தாய்
'இதயபூமி' யிலே இறுக்கமாய்
கால் பதித்தாய்
'யாழ்தேவி' நடவடிக்கை
சாம்பராய்ப் போவதற்கு
போராளிக் குழுவோடு பொருத்தமாய்ப்
போர் தொடுத்தாய்

கடைசிக் கணத்தில் உன்
களத்துப் புலிகளுடன்
ஒருக்கால் வந்தாய் - நாம்
கண்மூடி விழிக்குமுன்
கனவாய்ச் சென்றாய்
தடியோடு நான் நடந்து
கதவோரம் வந்து நிற்க,
கையில் 'பெடி' யோடு உனது அண்ணி
கண்கலங்கப் பார்த்திருக்க
பார்த்தாயா ... ... யா?
புரியவில்லை, நினைவில் தெரியவில்லை
தெருவோடு நீ ஓடி
துள்ளி அந்த வாகனத்தின
கூரையிலே பாய்ந்தேறிக்
குழுவோடு அமர்ந்ததைத்தான்
நாம் பார்த்தோம்
கனவாக மறைந்து போனாய்
''சும்மா பார்த்து விட்டுப் போகவந்தேன்''
என்றாய்,
எம் கண்ணிலெல்லாம் காயாத
நீர்கோர்த்து விட்டுத் தானய்யா
சென்றாய்.

நீ போனபின்னர் தானே நாம்
வானவில்லைப் பாத்தோம்... —
அந்த மழையில்த்தானே நீ விதையாய்ப்போனாய்.

விடுதலையே மூச்சாசி வீரமே விளக்காகி
பொருதுநின்ற படையினருள் புயலாகிப் போனாயென
விபரம் தெரிந்தவர்கள் விளக்கம் சொல்கையிலே
பூநகரிக் காட்சிஎங்கள் கண்ணில் நிழலாடுதையா
தலைவன் வளர்த்தமணி விளக்காய் நீயங்கு
தலைகள் சிதறடித்து தானை துடைத்தெறிந்த
கதைகள் பலஇங்கு காதில் அடிபடுது
ஆனாலும் மயூரா உன்
உடலைக் காணவில்லையடா
விழுப்புண்கள் பெற்ற உந்தன் வித்துடலை காண்பதற்கு
விதி எமக்கு இல்லைய்டா— அதனால்தான்
உதிரம் கொதிக்கிறது உடலம் பதைக்கிறது.

''சடலம்" என்றபெயர் உனக்கு இல்லையடா
''பொன்னுடல்" மின்னிடும் படம்வந்த ஊர்தியில்
கண்ணிலே ஒற்றிநாம் மாலை போட்டோம்
நிறை குடத்தோடுநின்றுநாம் நினைவை மீட்டோம்
''மொறிஸ்" சோடு நீ சென்ற பாதையின் வழியில்நாம்
உடலோடு உதிரமாய் ஒன்றிவாழ்வோம்
உயிரையே உருக்கிநாம் வேள்வி காப்போம்.

- அண்ணன்

## நயமான நண்பனே

களத்திலே புலியாகப் பாய்ந்திட்ட வேளையில்
கரும்புலியாய்ச் செல்லவில்லை கரும்புலி போலாகி விட்டீர்
களத்தினிலே பாய்ந்தபோது கண்டபின் நாம் காணவில்லை
வளமான நெல்வயல்சூழ் நெய்தல்நில எல்லையிலே
எதிரியின் வேட்டுக்களை ஏந்திவிட்டாய் மார்பினிலே
என்றுன்னை நினைக்க மாட்டோம் எரியாகி எரிந்துவிட்டாய்
எதிரியென்றெடுத்துரைப்போம் எரிமலையாகி வெடித்தாயென்போம்
நண்பனே நாம்காணும் தமிழீழக் கனவுகளில் நீ
வண்மையே செய்துவிட்டாய் வள்ளலாகி நின்றுவிட்டாய்
எண்ணில்லா வீரரோடு எதிரியின் களம் புக்கபோது
கண்ணற்ற கயவர்கள் கடிதினிலே துரத்தப்பட்டார்
விண்ணிலே புகுந்தவரை விரட்டநீ சென்றுவிட்டாய்
விண்ணிலும் தமிழீழம் மலர்ந்துவிடும் மயூரனே!
மண்ணிலே தமிழீழ வரலாற்றில் மலர்ந்திடுவாய்
தாளங்கள் மேளங்கள் ததிங்கிணதோம் வேட்டுக்கள்
சாளரங்கள் தோறும் தவிக்கின்ற கண்கள்
வேட்டுக்களாலெதிரியை வென்றுவிட்ட உன்புகழை
வேட்டுக்கள் போட்டு வீரவணக்கஞ் செய்து
வேங்கையே உனக்காக வெடியாலே வணங்குகின்றோம்
நடுயாமம் விளக்கேற்றி நல்லவரம் கேட்கின்றோம்
மாவீரர் இல்லமதில் மகிழ்வோடு துயிலுமுன்னை
மாலைகள் போட்டு மரியாதை செய்கின்றோம்
நேர்த்திகள் செய்வதுபோல் ''மாவீரர் நாள்" செய்கின்றோம்
சொல்லுகிறோம் உனைநம்பி விரைவில் வெல்வோம் எனநம்பி
உன்பாதம் அடிச்சுவடு உன்னாடை பாதுகை
உன் துப்பாக்கி இனி எங்கள் கையினிலே
துர்ப்பாக்கிய நிலையகற்ற உன்துப்பாக்கி துணையாகும்
துணிந்து விட்ட எங்களுக்கு தோழனே உன் தோள்கள் துணை.

- நண்பர்கள்

# அருமை மைத்துனரே

மைத்துனர்கள் நால்வருளர் மனையின் பக்கமெமக்கு
எத்துணையும் அச்சமில்லை எம் வாழ்வில் எமக்கினி
சொத்தாக நினைத்தவுங்கள் சொந்தத்தையே நீங்கினீரே
முத்தான மொழிக்காக முன்னோரை விட்டகன்றீர்
பருவத்தே பயிர் செய்தல் பயன்மிக்கதென்றெண்ணி
இருபேரும் சென்றீர்கள் ஒருவர் பின் ஒருவராக
இளையவரே இவ்வுலகில் இன்பவாழ்வை வெறுத்தீரோ
முளையிலே கிள்ளி முறித்தது போல் வாழ்வதனை
விளையாது விட்டேகி விண்ணிலே மின்னுகின்றீர்
களையாமல் நீரமைத்த களங்களுக்கு வந்தோமே
சளைக்காமல் உமக்குதவி சோர்வகற்ற விரும்பினோமே
நிலையான புகழோடு மனங்களிலே வாழ்கின்றீர்.
சிலையாகி விட்டீர்கள் சோதரிகள் சோகத்தால்
செங்குருதி வடிக்கின்றார் சினவேங்கைகளேயுமக்காக
வந்திடுவீர் வேங்கைகளே வெற்றிக் கொடியேந்திக் கண்முன்னே
மருமக்கள் ஆராத்தி வாழ்த்துக்கள் பாடிடுவார்
மங்கலமாய் இசைத்திடுவார் மாமன்மார் வந்திட்டால்.

— அத்தான்மார்

# எங்களுக்கும் தம்பி நீ

மஞ்சு மேய் மேகங்கள் வானத்தை மறைத்தது போல்
வஞ்சராலும் வாழ்வை மண்ணுக்குள் விதைத்தீரோ
துஞ்சுகின்றீர் நீண்டநாள் தூய்மையான நினைவோடு
விஞ்சுகின்ற புகழ் பரப்பி வீணரை விட்டினீரே
மஞ்சுளாக்கள் இருவரையும் அஞ்சிடாத அண்ணரையும்
பிஞ்சுமொழி பேசுகின்ற பெறாமக்களனைவரையும்
கெஞ்சுகின்ற எல்லோரையும் கரந்தெங்கே சென்றுவிட்டீர்
கொஞ்சுமொழி பேசுமெங்கள் பிள்ளைகளாய் மீளுங்கள்
மிஞ்சுகின்ற தமிழீழமாந்தரொடு பேசுங்கள்
அஞ்சாது போர் செய்த ஆற்றலின் வலி கூறுங்கள்
தஞ்சம் நீரென்றழுகின்ற தமிழரை நீர் தேற்றுங்கள்
கொஞ்சமேனுமெங்கள் குறைதீர்க்க மாட்டீரோ.

— அண்ணிமார்.

# மயூரனின் குடும்ப விபரம்

தந்தை; மு. ச. தியாகராஜா (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)
தாய்: தி. சிவகாமசுந்தரி


| சகோதரர்கள் | அண்ணிமார் | பெறாமக்கள் |
|---|---|---|
| தி. பிறேமராஜன் [முல்லை] | மஞ்சுளா | ஜனகன், கௌசிகன், பரதன், தக்ஷாயினி |
| தி. பார்த்திபராஜன் [ஜேர்மனி] | மஞ்சுளா | மொறிஸ் |
| தி. பரதராஜன் [கப்டன் மொறிஸ்] | | மாவீரன். |

| சகோதரிகள் | அத்தான்மார் | மருமக்கள் |
|---|---|---|
| செ. சந்திரவதனா (ஜேர்மனி) | தெ செல்வகுமாரன் | திலிபன், தீபா, துமிலன் |
| இ சந்திரகுமாரி (லண்டன்) | இ. இரவீந்திரகுமாரன் | தாணியன், ரிஷியன் |
| க. சந்திரபிரபா | வே. கணேசமூர்த்தி | பஹீந்துஷா |
| தி குமாரிபாமா (ஜேர்மனி) | தங்கை | |

# நன்றி நவிலல்

எங்கள் மகன் விறல் வேங்கை கப்டன் மயூரன் (பாலசபாபதி) வீரச்சாவடைந்த செய்தி கேட்டு ஓடிவந்து ஆக்கபூர்வமான உதவிகளைச் செய்த நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**M. S. தியாகரர்ஜாவும்**
**குடும்பத்தினரும்.**



குமார் அச்சகம் — பருத்தித்துறை.